அவர்கள் இந்த முதியோர்களைக் காப்பாற்றுவதற்காகவே ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்று ஆணையிட்டு சமீபத்திலேதான் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, 23 மாவட்டங்களில் 46 வட்டாரங்களில் மொத்தம் ரூ. 7,33,17,500 செலவில் ஆதரவற்ற முதியோரும் குழந்தைகளும் தங்குவதற்கான ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைப்பதற்கு கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேண்டிபாண்டியார் கோட்டத்தில் ஓர் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதில் 9 ஆண்டுகளாக சத்துணவு போடவில்லை. அங்கே சத்துணவு போடுவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இது சம்பந்தம் இல்லாத கேள்வி.*

திரு. மு. திராவிடமணி: *சம்பந்தமில்லாத கேள்விதான், தொடர்பு இல்லாத கேள்விதான், இருந்தாலும் . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.*

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

விவசாய இடுபொருட்கள்

***7922—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு விவசாய இடுபொருட்கள் வழங்கப்படும் விவரத்தினை விளம்பரம் மூலமாகத் தெரியப்படுத்த அரசு முன்வருமா ?

2012 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது திட்டங்கள் பற்றி விவசாயிகள் தெரிந்துகொள்ள துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள், தொழில்நுட்பப் புத்தகங்கள் "அக்ரிஸ்நெட்" (tnagrisnet.tn.gov.in) என்ற இணையதளம், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.3,804.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இரண்டாவது பசுமைப் புரட்சி ஏற்படுத்தியிருக்கின்ற இதய தெய்வம், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

சாலை மேம்பாடு

***7020—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர்–தெங்குமரஹடா சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட சுஜ்ஜல் குட்டை முதல் தெங்குமரஹடா வரை செல்லும் சாலை 26 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாகும். இச்சாலை தலமலை காப்புக் காடு மற்றும் தலமலை கூடுதல் காப்புக் காடு பகுதியில் அமைந்துள்ளது.